**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்**
**முன்னிலை:– திருமதி. ஆ. சுபஸ்ரீ, எல்.எல்.எம்.,**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**திருப்பூர்.**

**2025–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 01 ஆம் நாள் செவ்வாய்கிழமை**
**திருவள்ளுவராண்டு 2055, குரோதி வருடம், பங்குனி திங்கள் 18 ம் நாள்**

**இடைக்கால மனு எண். 732/2024**
**இன்**
**அசல் வழக்கு எண். 156/2019**

1. S. அம்மாசை
2. S. மூர்த்தி ..மனுதாரர்கள்/வாதிகள்

..எதிராக..

1. S.ஹேமலதா
2. ஆணையளர்,
திருப்பூர் மாநகராட்சி, திருப்பூர் ..எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு கடந்த 12.03.2025 ம் தேதியன்று என் முன்பு இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.சகாதேவன் அவர்கள் முன்னிலையாகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.D.சுந்தரராஜ் அவர்கள் முன்னிலையாகியும், 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.கார்த்திக் அவர்கள் முன்னிலையாகியும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் ஆய்வில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்,

**உத்தரவு**

உரிமையியல் நடைமுறை சட்டம், கட்டளை 26 விதி 9ன் கீழ் நீதிமன்ற ஆணையர் நியமனம் கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்</u> :

**2.1** மனுதாரர்கள் அசல் வழக்கில் வாதிகள். இ.ம.எண்.610/2019ல் நீதிமன்ற ஆணையர் நியமனம் கோரி மனுதாக்கல் செய்து மேற்படி மனு அனுமதிக்கப்பட்டு திரு.அமர்நாத் வழக்கறிஞர் நீதிமன்ற ஆணையராக நியமனம் செய்யப்பட்டார். அதன்படி நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தினை கடந்த 23.02.2024ம் தேதி வட்ட சர்வேயருடன் தாவா சொத்தினை பார்வையிட்டபோது மனுதாரர்கள் தரப்பில் சொத்திற்கு சேர்ந்த உட்பிரிவு எண்கள்.236, 235 ஆகியவற்றை அளக்க வேண்டும் என்றும், அப்போது தான் தாவா சொத்திற்குண்டான பிரச்சனை தீர்வாகும் என்று கோரப்பட்டுள்ளது. அதற்கு சர்வேயரும், நீதிமன்ற ஆணையரும் மறுத்துவிட்டனர்.

**2.2** அதன் பின்னிட்டு நீதிமன்ற ஆணையர் அவரது அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார். மேற்படி அறிக்கையின் பேரில் மனுதாரர்கள் கடுமையான ஆட்சேபனையை நீதிமன்றத்தில் பதிவு செய்துள்ளார்கள். அதன் பின்பு மேற்படி மனுவானது முடிக்கப்பட்டுவிட்டது. தாவா சொத்தினை அளவீடு செய்யும்போது அதற்குண்டான கிழமேல், தென்வடல் வழித்தடம் மற்றும் அதனை சேர்ந்த உட்பிரிவு எண்.236, 235 ஆகியவைகளை அளக்க வேண்டியது மிகவும் இன்றியமையாத ஒன்று. மேலும் தாவா சொத்தினை 1,2 பிரதிவாதிகள் தரப்பில் மனுதாரர்கள் தரப்பில் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக தெரிவித்துள்ளனர்.

**2.3** உட்பிரிவு எண்.236ற்குண்டான சந்தினை 1,2 பிரதிவாதிகள் உட்பிரிவு எண்.235உடன் சேர்ந்து உட்பிரிவு எண் 215 வழித்தடத்தினை ஆக்கிரமிப்பு செய்து வருகின்றார்கள். அது மனுதாரர்களின் அனுபவத்தினை தடுக்கின்றது. மேலும் இது குறித்து சர்வேயர் சரியான முறையில் அளந்து கொடுக்க கேட்டும் மறுத்துவிட்டனர். நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்து உத்தரவு பெற்றுவந்தால் மேற்படி வழக்கு சொத்திற்கு சேர்ந்து உட்பிரிவுகள் 235, 236 ஆகியவைகளை அளக்க தயாராக உள்ளதாக தெரிவித்துள்ளனர். எனவே, நீதிமன்ற ஆணையர் நிலஅளவையரின் உதவியுடன் தாவா சொத்துக்களை அளவீடு செய்து அதன் அறிக்கை மற்றும்

வரைபடத்தை தாக்கல் செய்ய வேண்டி மனுதாரர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. **(அசல் வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையை எதிருரையாக பாவிக்க கோரி குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டுள்ளது ) 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம் :–**

மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனு பொய் மற்றும் மோசடியான ஒன்று. அது சட்டப்படியும், பொருண்மைப்படியும் நிலைக்கத்தக்கதல்ல. மனுதாரர்களின் சொத்திற்கு கிழபுறம் 1ம் பிரதிவாதியின் சொத்து உள்ளது. 1ம் பிரதிவாதி சொத்திற்கு வடபுறம் கிழமேல் பாதை உள்ளது. மேற்படி பாதையை உபயோகித்து 1ம் பிரதிவாதி அவரது சொத்திற்கு சென்று வருகிறார். வாதிக்கு மேற்படி பாதையில் உரிமையில்லை. மாநகராட்சிக்கு சொந்தமான பாதையில் சட்டத்திற்கு புறம்பாக கட்டுமானம் செய்வதற்கு வாதி முயற்சிக்கிறார். முன்தீர்ப்பு தடை கோட்பாடு, முரண்தடை கோட்பாடு மற்றும் காலவரையறை சட்டத்தால் அசல் வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது. T.S.No.235ல் வடபுறம் கிழக்கே ரோட்டின் இறுதியில் 1ம் பிரதிவாதியின் சொத்து அமைந்துள்ளதால் மேற்படி வழித்தடத்தை அடைத்துவிட்டால் 1ம் பிரதிவாதி அவரது சொத்திற்கு செல்ல இயலாது. எனவே மனுவை தள்ளுபடி செய்யுமாறு எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. **2ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம் :**

மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனு பொய் மற்றும் மோசடியான ஒன்று. அது சட்டப்படியும், பொருண்மைப்படியும் நிலைக்கத்தக்கதல்ல. அசல் வழக்கானது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர்கள்/வாதிகளால் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வருவாய் ஆவணங்கள் படி பழைய க.ச.எண்.234, புதிய க.ச.எண்.209 சாலை என்று 2ம் எதிர்மனுதாரர் பெயரில் உள்ளது. மேற்படி சாலையை ஆக்கிரமித்து மனுதாரர்களால் சட்டத்திற்கு புறம்பாக தற்காலிக கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. அதனை அகற்ற வேண்டி அறிவிப்பு அனுப்பிய பிறகு அதற்குட்படாமல் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தாவா சொத்தின் அருகே உள்ள க.ச.எண்.235 மற்றும் 236ஐ அளவீடு செய்யக்கோரி தாக்கல் செய்துள்ள இம்மனு தேவையற்ற ஒன்று. எனவே மனுவை தள்ளுபடி செய்யகோரி 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**5.** மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**6.** இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதிகள் யாதெனில், மனுதாரர்கள் கோரிய படி மனுவை அனுமதிக்க வேண்டுமா? என்பதேயாகும்.

**7. <u>தீர்வு</u> :**

**7.1** இருதரப்பினர்களுக்கும் அவர்களது தரப்பு வாதத்தை முன்வைக்க கோரி போதிய வாய்ப்பளித்தும் அவர்களது தரப்பு வாதம் முன்வைக்கப்படவில்லை.

**7.2** அசல் வழக்கானது மனுதாரர்கள்/வாதிகளால் தொட்டிபாளையம் கிராமம், பிளாக் எண்.41, நகர புல எண் மற்றும் உட்பிரிவு எண்.234ல் அமைந்துள்ள கிழமேல் 11அடி தென்வடல் 10 அடி அளவுள்ள ஓட்டு வீட்டிற்கு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**7.3** இம்மனுவானது தொட்டிபாளையம் கிராமம், பிளாக் எண்.41, நகர புல எண் மற்றும் உட்பிரிவு எண்.235 மற்றும் 236 க்குண்டான வழித்தடம் மற்றும் உட்பிரிவு எண்.215 ஆகியவற்றை நிலஅளவையர் உதவியுடன் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்து அளவீடு செய்யக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**7.4** தொட்டிபாளையம் கிராமம், நகர புல எண் மற்றும் உட்பிரிவு எண்.234ல் அமைந்துள்ள சொத்திற்கு 1,2 எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கை தாக்கல் செய்து விட்டு, அதற்கு

தொடர்பு இல்லாத நகர புல எண் மற்றும் உட்பிரிவு எண் 235, 236 மற்றும் 215ஜ அளவீடு செய்யக்கோரி தாக்கல் செய்துள்ள இம்மனு அசல் வழக்கின் தீர்விற்கு எவ்வகையிலும் உதவாது என்று முடிவு செய்து மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

**முடிவில்**, மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1ஆம் நாள் அவையறிய பகரப்பட்டது.

A SUBASHRI

Digitally signed by A SUBASHRI
Date: 2025.04.01 17:58:54 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருப்பூர்.

<u>**இருதரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்**</u> : இல்லை

A SUBASHRI

Digitally signed by A SUBASHRI
Date: 2025.04.01 17:59:00 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருப்பூர்.